தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா.1

நாள் 04.11.2025

| | | | |
|---|---|---|---|
| SC. No. | 76/2025 | | |
| பெயர் | பாலமுருகன் | த/பெ. | சுப்பிரமணியன் |
| வயது | 38 | தொழில் | [illegible] |
| கிராமம் | வைத்தீஸ்வரன் கோவில் | தாலுக்கா | சீர்காழி |

**(எதிரிகள் ஆஜர், ).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் தற்போது வைத்தீஸ்வரன் கோவிலில் வசித்து வருகிறேன். நான் வைத்தீஸ்வரன் கோவிலில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் (மகசர் மற்றும் பார்வை) மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையதுதான். அந்த கையொப்பங்கள் முறையே **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.3** ஆகும். என்னுடன் சரவணன் என்பவரும் அதில் கையொப்பம் செய்தார். மேற்படி கையொப்பத்தை சுமார் 1வருடத்திற்கு முன்பு நான் சொந்த வேலையாக வைத்தீஸ்வரன்கோவில் காவல் நிலையம் சென்றபோது செய்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எந்த விபரமும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சி எனக்கூறி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :-

கடந்த 13.06.2024 அன்று காலை 10.15 மணியளவில் தையலம்மைபுரம் லோகேஷ் மளிகை கடையில் கூல்டிரிங்ஸ் வாங்கிக்கொண்டிருந்தபோது வைத்தீஸ்வரன் கோவில் காவல் ஆய்வாளர் அந்த கடையில் சோதனை செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த கடையில் இருந்த முத்துராஜ் என்பவரை விசாரித்தபோது அவர் தானாக

CJM, MAYILADUTHURAI.

முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் நானும், சரவணன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி முத்துராஜ் என்பவரிடமிருந்து ஹான்ஸ் பாக்கெட்டுகளை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் மற்றும் பார்வை மகசரில் நானும், சரவணனும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. மேற்படி விபரம் அனைத்தும் நேரடியாக தெரிந்தும், உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதராவாக போலீசார் விசாரிக்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

இல்லை என முறையீடு செய்யப்பட்டது.

S. Babu

மறு விசாரணை :-

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

4/1/23

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா.2

நாள் 04.11.2025

| SC. No. | 76/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணன் | த/பெ. | முத்துக்குமரன் |
| வயது | 45. | தொழில் | கோவில் ஊழியர் |
| கிராமம் | வைத்தீஸ்வரன்கோவில் | தாலுக்கா | சீர்காழி. |

**(எதிரிகள் ஆஜர். ).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் தற்போது வைத்தீஸ்வரன் கோவிலில் வசித்து வருகிறேன். நான் வைத்தீஸ்வரன் கோவிலில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் (மகசர் மற்றும் பார்வை) மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையதுதான். அந்த கையொப்பங்கள் முறையே **அ.சா.ஆ.4** முதல் **அ.சா.ஆ.6** ஆகும். என்னுடன் பாலமுருகன் என்பவரும் அதில் கையொப்பம் செய்தார். மேற்படி கையொப்பத்தை சுமார் 1வருடத்திற்கு முன்பு நான் சொந்த வேலையாக வைத்தீஸ்வரன்கோவில் காவல் நிலையம் சென்றபோது செய்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எந்த விபரமும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சி எனக்கூறி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :–

கடந்த 13.06.2024 அன்று காலை 10.15 மணியளவில் தையலம்மைபுரம் லோகேஷ் மளிகை கடையில் கூல்டிரிங்ஸ் வாங்கிக்கொண்டிருந்தபோது வைத்தீஸ்வரன் கோவில் காவல் ஆய்வாளர் அந்த கடையில் சோதனை செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த கடையில் இருந்த முத்துராஜ் என்பவரை விசாரித்தபோது அவர் தானாக

CJM, MAYILADUTHURAI.

M. Sa...

முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் நானும், பாலமுருகன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி முத்துராஜ் என்பவரிடமிருந்து ஹான்ஸ் பாக்கெட்டுகளை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் மற்றும் பார்வை மகசரில் நானும், பாலமுருகன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. மேற்படி விபரம் அனைத்தும் நேரடியாக தெரிந்தும், உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக போலீசார் விசாரிக்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :-

இல்லை என முறையீடு செய்யப்பட்டது.

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

M. Sam

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

4/11/23

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா.3

நாள் 04.11.2025

| SC. No. | 76/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | கோபிநாத் | த/பெ. | பாலு |
| வயது | 38 | தொழில் | விவசாயம் |
| கிராமம் | வைத்தீஸ்வரன்கோயில் | தாலுக்கா | சீர்காழி |

**(எதிரிகள் ஆஜர், ).**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் தற்போது வைத்தீஸ்வரன் கோவிலில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ரமேஷ் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் மற்றும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பங்கள் என்னுடையதுதான். அந்த கையொப்பங்கள் முறையே **அ.சா.ஆ.7** 5 முதல் **அ.சா.ஆ.9** 7 ஆகும். என்னுடன் சுரேஷ்குமார் என்பவரும் அதில் கையொப்பம் செய்தார். மேற்படி கையொப்பத்தை சுமார் 1வருடத்திற்கு முன்பு நான் சொந்த வேலையாக வைத்தீஸ்வரன்கோவில் காவல் நிலையம் சென்றபோது செய்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எந்த விபரமும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சி எனக்கூறி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :–

கடந்த 13.06.2024 அன்று மதியம் 12.45 மணியளவில் நானும், சுரேஷ்குமார் என்பவரும் கற்கோவில் அருகில் விநாயகன் நகருக்கு சென்றபோது வைத்தீஸ்வரன் கோவில் காவல் ஆய்வாளர் ரமேஷ் என்பவரை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. ரமேஷ் என்பவரை விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம்

பா. கோபிநாத்.

CJM, MAYILADUTHURAI.

கொடுத்தார் என்றும், அதில் நானும், சுரேஷ்குமார் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சுரேஷ் என்பவரிடமிருந்து ஹான்ஸ் பாக்கெட்டுகள் மற்றும் TN518Q30418 என்ற பதிவெண் கொண்ட நான்கு சக்கர வாகனம் மற்றும் TN82L2038 HONDA ACTIVA என்ற இருச்சக்கர வாகனத்தை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசர் மற்றும் பார்வை மகசரில் நானும், சுரேஷ்குமாரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. மேற்படி விபரம் அனைத்தும் நேரடியாக தெரிந்தும், உண்மையை மறைத்து எதிரிகளுக்கு ஆதராவாக போலீசார் விசாரிக்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

பா. கோபிநாத்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :-

இல்லை என முறையீடு செய்யப்பட்டது.

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

[signature] 4/11/23

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.